**மண்முனை பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-----------------------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 01 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மண்முனை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக அழிக்கப்பட்ட ரூபா 165,500 பெறுமதியான சொத்துக்கள் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்படாமல் உள்ளதால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட நிலையான சொத்துகளுக்கான புத்தகப் பெறுமதி ரூபா 97,350 தொகை ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 781,370 தொகையை அறவிடுவதற்கு 2016 மே 20 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 திசெம்பர் 31 இல் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,958,631 தொகையை செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

-----------------------------------

நிலையான வைப்பாக ரூபா 1,500,000 கணக்குகளில் காட்டப்பட்டிருந்தும் அதை உறுதிப்படுத்துவதற்கு வைப்புச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

-------------------------------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு<br>---------------------------------- | இணங்காமை<br>-------------------- |
| --- | --- |
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்<br>---------------------------------- | |
| (i) அத்தியாயம் I இன் விதி 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் என்பவை இரு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

----------------

2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 13,456,670 ஆகும். இதனொடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,371,982 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 9,084,688 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் ஒன்பது ஊழியர்களிடமிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட்ட ஓய்வூதியப் பங்களிப்பும் அந்த ஊழியர்களுக்காக சபையால் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்பும் சேர்ந்த ரூபா 581,627 மொத்த தொகையை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் 2008 ஆம் ஆண்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 05 மோட்டார் வாகனங்களின் உரிமை 2016 மே 20 ஆந் திகதி வரை சபையின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்
--------------------------------------------

இளைஞர் வலுவூட்டல் நோக்கத்திற்காக USAID நிறுவனத்தால் 2012 ஆம் ஆண்டு அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 500,000 பெறுமதியுடைய உடற்பயிற்சி இயந்திரங்கள் உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தாது 2016 மே 20 ஆம் திகதி வரை அலுவலகத்தில் பாவனையற்று இருக்கக் காணப்பட்டது.

4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்
------------------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்